

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (9.6.2025) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்ய பிரதா சாகு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார், வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் த.மோகன், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) எஸ்.பி. அம்ரித், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (9.6.2025) தலைமைச் செயலகத்தில், எரிசக்தித் துறை சார்பில் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், பசுமை எரிசக்தி கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ். அனீஷ் சேகர், மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்.பி. பேட்டி!

## முதல் பக்கத் தொடர்ச்சி

**கேள்வி:** அமித்ஷா வருகை தி.மு.க.விற்கு ஷாக் அடிக்கின்றதாக கூறுகிறார்களே?

**பதில்:** அமித்ஷாவை பார்த்து தி.மு.க.விற்கு எதற்கு ஷாக் அடிக்க வேண்டும்? தி.மு.க.வைப் பார்த்து பா.ஜ.க.விற்கு ஷாக் அடித்த காரணத்தால்தான் உள்துறை அமைச்சரே வந்துள்ளார். பா.ஜ.க.வின் எந்த மாதிரியான பிளவுவாதமும், மத அரசியலும் தமிழ்நாட்டில் எடுபடவில்லை. எல்லா தேர்தல்களிலும் மக்கள் திமுகவின் பின்னால் நிற்கிறார்கள். இதை புரிந்துகொள்ள முடியாமல், ஜீரணித்துக்கொள்ள முடியாமல் இவர்கள் பேசுவதை பார்த்து எங்களுக்கு எதற்கு பயம்? இவர்களைப் பார்த்து சிரிப்புதான் வருகிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு 5 முறை நாட்டின் பிரதமர் தமிழ்நாடு வந்தார். அவரின் வருகையே சொல்லும் யாருக்கு பயம் என்று.

**கேள்வி:** தி.மு.க.வின் தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று குற்றம் சாட்டுகிறார்களே?

**பதில்:** தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றி விட்டோம். அரசு ஊழியர்களுக்கான வாக்குறுதி மட்டும் நிலுவையில் உள்ளது. ஆனால் அதற்கும் ஒரு குழு அமைத்துள்ளார் முதல்வர். வாக்குறுதிகளில் சொல்லாத பலவற்றை இந்த அரசு செய்துள்ளது. எங்கு விவாதத்தை வைத்தாலும் நான் வர தயார். ஆனால் இந்தியில் மட்டும் பேசக் கூடாது. ஒன்றிய நிதி ஒதுக்க வேண்டிய எய்ம்ஸுக்காக இன்னமும் மாநில அரசு காத்துக்கொண்டுள்ளது.

அமித்ஷா, மோடி ஆகியோரை பார்த்து எங்களுக்கு எந்த பயமும் இல்லை. அவர்களுக்கு பின்னால் ஒரு சித்தாந்தம் ஒளிந்துகொண்டு மற்ற இடங்களில் வெற்றி பெறுகிறது. ஆனால் இங்கு அதனால் வெற்றி பெற முடியாததற்கு காரணம் எங்களிடம் அதற்கான மாற்று சித்தாந்தம் உள்ளது. திராவிட இயக்க சித்தாந்தம் இருக்கும் வரை அவர்களால் இங்கு ஆட்சிக்கு வர முடியாது. நாங்கள் டெல்லியோ, ஹரியானாவோ, மகாராஷ்டிராவோ அல்ல; நாங்கள் தமிழ்நாடு.

**கேள்வி:** தொகுதி மறுசீரமைப்பு பற்றி அமித் ஷா ஏன் பேச மறுக்கின்றார் என்பது குறித்து ?

**பதில்:** எந்த அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு வர போகிறது என தி.மு.க. தொடர்ந்து கேள்வி எழுப்பினாலும் எந்தப் பதிலும் பா.ஜ.க.விடம் இல்லை. 800க்கும் அதிகமான இருக்கைகளை வைத்து புதிய நாடாளுமன்ற கட்டிடத்தைக் கட்ட என்ன அவசியம்? மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பைச் செய்தால் கொண்டு வந்தால் தென் இந்தியா முற்றிலும் பாதிக்கப்படும். தென் இந்திய மாநிலங்களின் துணை இல்லாமலே எந்த ஒரு மசோதாவையும் அவர்களால் நிறைவேற்ற முடியும் என்பதுதான் அதற்குள் இருக்கும் சூது. இதை முறியடித்த ஒரே தலைவர் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள்தான். அதை டெல்லி வரை அனைவரும் ஒப்புக்கொண்டுள்ள னர்.

### கீழடி ஆய்வை நிராகரித்தது ஏன்!

**கேள்வி:** மதுரையில் பா.ஜ.க. நடத்தும் முருகன் மாநாடு குறித்து – உங்கள் கருத்து என்ன?

**பதில்** : அரசியல் ஆதாயத்திற்காக மட்டுமே மதுரையில் முருகன் மாநாட்டை நடத்துகின்றனர். இந்து சமய அறநிலையத்துறை சார்பாக நடத்தப்பட்ட மாநாட்டை போல் அல்லாமல், இவர்கள் மதவாதத்தைத் தூண்டி விட்டு, அதன் மூலம் சிறுபான்மையினருக்கு எதிராக அரசியல் செய்து ஆதாயம் தேட முயற்சிப்பதை மதுரை மக்களே விரும்பவில்லை. தமிழைப் பற்றி இவ்வளவு பேசும் அமித்ஷா, கீழடி ஆய்வையும், இரும்பு பயன்பாட்டின் அறிக்கையையும் ஒன்றிய அரசு திரும்ப திரும்ப ஏன் நிராகரிக்கிறது எனத் தெரியவில்லை. தமிழுக்கும், தமிழர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும், திராவிடத்திற்கும் எதிரான மனநிலையை அவர்களே வெளிக்காட்டிக் கொள்கிறார்கள். அதற்கான தண்டனையை 2026 தேர்தலில் நிச்சயம் பா.ஜ.க. அறுவடை செய்யும். இவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு வட இந்திய மொழிகளின் நிலைமை என்ன என்பதை யோசிக்க வேண்டும். இந்தியைக் கொண்டு வந்தவர்கள், அடுத்ததாக சமஸ்கிருதம் மொழியைக் கொண்டு வருவார்கள்.

### பா.ஜ.க.விற்கு தகுதி இல்லை!

**கேள்வி:** மோடி, அமித் ஷா ஆகியோரின் வருகை தி.மு.க. அணியின் வெற்றியையே உறுதி செய்யும் என் பதில் உறுதியாக இருக்கிறீர்களா?

**பதில்:** நிச்சயமாக. இதற்கு முன் எத்தனை முறை மோடி தமிழகம் வந்தாரோ அத்தனை வாக்கு வித்தியாசம் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.விற்கு கிடைத்தது. தற்போது எத்தனை முறை அமித்ஷா தமிழகம் வருகிறாரோ அத்தனையும் வெற்றி தொகுதிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கைப் பற்றி பேச பா.ஜ.க.விற்கு எந்த தகுதியும் இல்லை. பில்கிஸ் பானு, மணிப்பூர் போன்றவற்றை பார்த்து மௌனமாக இருந்தார்கள்.

**கேள்வி:** ஏக இந்தியா என்று பா.ஜ.க. கூறுவது பற்றி...

**பதில்:** ஒரே தேசம் என்று சொன்னால், ஒடிசாவில் போய், ஒரு தமிழர் உங்களை ஆளலாமா என்று கேட்டவர் எப்படி ஏக இந்தியா, ஒரே தேசம் எனக் கூறமுடியும். பா.ஜ.க.வினர் கூறுவது அனைத்தும் பொய். ஆர்.எஸ்.எஸ் ன் இலக்கிற்கு மோடியும் அமித்ஷாவும் பகடைக்காய் ஆகியுள்ளனர்.

**கேள்வி:** கூட்டணி ஆட்சி பற்றி எடப்பாடி பழனிசாமி என்ன பதில் சொல்வார் என்று எதிர் பார்க்கிறீர்கள்?

**பதில்:** கூட்டணி ஆட்சிதான் அமையும் என அமித்ஷா கூறியது குறித்து மீண்டும் எடப்பாடி பழனிசாமி தான் தெளிவுபடுத்த வேண்டும். எப்படிப்பட்ட கூட்டணி அமைந்தாலும் அதை எதிர்கொள்ளும் திறன் எங்கள் முதலமைச்சருக்கு உண்டு.

இவ்வாறு ஆ.ராசா பேட்டியளித்தார்.

# சேலம் மாவட்டத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

# டிரோன்கள் பறக்கத் தடை!

## மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவிப்பு!

சேலம், ஜூன் 10 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சேலம் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதையொட்டி ஜூன் 11, 12 தேதிகளில் டிரோன்கள் பறக்கத்தடை விதிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி அறிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் வருகையையொட்டி, சேலம் மாவட்டத்தில் 11.06.2025 மற்றும் 12.06.2025 ஆகிய நாள்களில் டிரோன்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தெரிவித்துள்ளதாவது:-

முதலமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்திற்கு வருகின்ற 11.06.2025 அன்று வருகைபுரிந்து, 12.06.2025, வியாழக்கிழமை அன்று காலை காவிரி டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணையினைத் திறந்து வைத்து, சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் அரசு விழாவில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்க உள்ளார்கள்.

இதனையொட்டி, சேலம் மாவட்டத்தில் வருகின்ற 11.06.2025 மற்றும் 12.06.2025 ஆகிய இரண்டு நாள்களில் டிரோன்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி தெரிவித்துள்ளார்.

# ஒரே நாடு ஒரே தேர்தல்:

# கூட்டுக்குழு தலைவரின் அறிவிப்புக்கு கண்டனம்!

புதுடெல்லி, ஜூன் 10-

ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்துக்கு பா.ஜ.க. அல்லாத கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்த நிலையில் கடந்த டிசம்பர் மாதம் ஒரே நாடு ஒரே தேர்தல் தொடர்பான மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளின் எதிர்ப்பால் மசோதா குறித்து ஆய்வு செய்ய நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைக்கப்பட்டது. இந்த குழு இதுவரை 7 முறை கூடியுள்ளது. இந்த குழு பா.ஜ.க. ஆட்சியில் உள்ள மகாராஷ்டிரா, உத்தரகாண்ட் மாநிலங்களுக்கு நேரில் சென்று கருத்து கேட்பு நடத்தியுள்ளது. மற்ற மாநிலங்களுக்கு இன்னும் செல்லவில்லை. குழுவின் கால அவகாசம் மழைக்கால கூட்டத் தொடர் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. அதனை மேலும் நீட்டிக்க வேண்டும் என்று காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் வலியுறுத்தி உள்ளன.

இதனிடையே கூட்டுக் குழுவின் தலைவரும், பா.ஜ.க. எம்.பி.யுமான பி.பி. சவுத்ரி 2034 ஆம் ஆண்டு நாடுமுழுதும் ஒரே தேர்தல் நடத்தப்படும் என்று கூறியுள்ளார். கூட்டுக்குழு தலைவரின் தன்னிச்சையான இந்த அறிவிப்பு சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. பா.ஜ.க. அல்லாத கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

# பாலிடெக்னிக் கல்லூரி மாணாக்கர்களுக்கு சிறப்பு துணைத் தேர்வு!

## உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தகவல்!



சென்னை, ஜூன். 10-

பாலிடெக்னிக் கல்லூரி மாணாக்கர்கள் தங்களின் வாழ்வில் அடுத்த நிலைக்கு செல்ல வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு அவர்களும் வாழ்வில் முன்னேற்றம் பெற மேல்நிலை இரண்டாமாண்டு மாணாக்கர்களுக்கு சிறப்பு துணைத் தேர்வு நடத்துவது போல் சில பாடங்களில் தேர்ச்சி பெறாத பாலிடெக்னிக் கல்லூரி மாணாக்கர்களுக்கு ஜூன் / ஜூலை 2025 சிறப்பு துணைத் தேர்வு நடத்தப்பட உள்ளதாக உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர் கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, தமிழ்நாட்டு மக்களின் பொருளாதார தேவையை அறிந்து அரசின் அனைத்து துறைகளின் சார்பாக பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகிறது. தமிழ்நாட்டின் மாணவச் செல்வங்களின் எதிர்கால நலன் கருதி, மாணாக்கர்களின் மீது தனி அக்கறை கொண்டு உயர் கல்வித் துறையில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி மாணாக்கர்களின் கல்வித் தரத்தை செம்மைபடுத்தி வருகிறது. ஏழை, எளிய மாணாக்கர்கள் கல்வி பயின்று, தகுந்த வேலை வாய்ப்பினைப் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் பல்வேறு நிலையில் தொழிற்சார் பயிற்சியினை வழங்கி வருகிறது.

ஏப்ரல், 2025இல் நடைபெற்ற பட்டயத் தேர்வுகளில் இறுதி பருவம் / துணைத் தேர்வினை எழுதிய பாலிடெக்னிக் கல்லூரி மாணாக்கர்கள் சில பாடங்களில் தேர்ச்சி அடையாமல் நிலுவை வைத்துள்ளனர். அம்மாணாக்கர்கள் அடுத்த நிலையான உயர் கல்வி பயிலவோ அல்லது வேலை வாய்ப்பிற்கோ செல்ல இயலாமல் இருக்கும் சூழ்நிலையினை போக்க முதலமைச்சர் அவர்கள் மேற்படி மாணாக்கர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பினை வழங்க ஏதுவாக ஜூன் / ஜூலை 2025 சிறப்பு துணைத் தேர்வின் (Special Supplementary Examination) மூலம் தேர்ச்சி பெறாமல் உள்ள நிலுவைப் பாடங்களை எழுத வாய்ப்பு வழங்கிட அறிவுறுத்தியுள்ளார். அதன்படி இம்மாணாக்கர்களுக்கு தற்பொழுது ஒரு வாய்ப்பு வழங்கப்படுகிறது.

இது குறித்த விவரங்கள் அனைத்தும் https://dte.tn.gov.in என்ற இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இணையதளத்தின் வாயிலாக மாணாக்கர்கள் அறிந்து கொள்ளலாம். மேலும், ஜூன் / ஜூலை 2025 சிறப்பு துணைத் தேர்வுகளுக்கு கீழ் குறிப்பிட்டுள்ள கால அட்டவணையின்படி விண்ணப்பிக்கலாம்.

**ஜூன் / ஜூலை 2025 சிறப்பு துணைத் தேர்வுகளுக்கு விண்ணப்பிப்பதற் கான கால அட்டவணை**

சிறப்பு துணைத் தேர்வுகளுக்காக இணைய வழியில் விண்ணப்பிக்க ஆரம்ப நாள் 18.06.2025 (புதன் கிழமை)

சிறப்பு துணைத் தேர்வுகளுக்காக இணைய வழியில் விண்ணப்பிக்க கடைசி நாள் : 23.06.2025 (திங்கட் கிழமை) இரவு 11.59 வரை

தேர்வு நுழைவுச் சீட்டு பதிவேற்றம் செய்யப்படும் நாள் : 25.06.2025 புதன் கிழமை

கருத்தியல் தேர்வுகள் நடைபெறும் நாட்கள்: 30.06.2025 (திங்கட்கிழமை) முதல் 16.07.2025 (புதன்கிழமை) வரை

செய்முறைத் தேர்வுகள் நடைபெறும் நாட்கள் : 17.07.2025 (வியாழக்கிழமை) முதல் 25.07.2025 (வெள்ளிக்கிழமை) வரை

தேர்வு முடிவு வெளியிடப்படும் நாள் : 30.07.2025 (புதன்கிழமை)

**ஜூன் / ஜூலை 2025 சிறப்பு துணைத் தேர்வுகளுக்கான தேர்வுக் கட்டணம்**

விண்ணப்பக் கட்டணம் ரூ. 30/-

ஒரு பாடத்திற்கான தேர்வுக் கட்டணம் ரூ. 65/-

மாணாக்கர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி தங்கள் எதிர்காலத்தை வளமாக்கி கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு, உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# ஜெ. அன்பழகன்

## ஜூன் 10 (2020)



மிசா பழக்கடை ஜெயராமன் மகனான இவர், தனது பள்ளிப் பருவம் முதலே தீவிர கழகப் பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் தியாகராயர் நகர் பகுதியில் சார்பு மன்றச் செயலாளர், பகுதி பிரதிநிதி, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர், பகுதிக் கழகச் செயலாளர், மாவட்டக் கழகச் செயலாளர் என படிப்படியாக, சார்பு மன்ற செயலாளர் முதல் மாவட்டச் செயலாளர் வரை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் சென்னை மாவட்ட தளகர்த்தர்களில் ஒருவராக விளங்கியதோடு, கலைஞர் அவர்களைத் தனது தந்தையின் இடத்தில் வைத்துப் போற்றியவர். தியாகராயர் நகர் பகுதியிலும், ஒருங்கிணைந்த தென்சென்னை மாவட்டத்திலும், பிறகு சென்னை மேற்கு மாவட்டத்திலும் கழகத்திற்குச் சிறப்பாக வலுவூட்டியவர்.

கழகத் தலைவர் அவர்கள் இளைஞரணிச் செயலாளராக இருந்த காலம்தொட்டே அவரது நம்பிக்கை மிகுந்த உடன்பிறப்பாக, கொள்கைத் தோழனாக, இயக்கத்தின் இலட்சிய சகோதரன் என்கிற உணர்வுடன் நெருங்கிப் பழகியவர்.

2001 தியாகராயர்நகர் தொகுதியிலும், 2011, 2016களில் சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று, அப்பகுதி மக்கள் நன்மதிப்பை பெற்றவர்.

1976ல் இந்திராகாந்திக்கு கருப்பு கொடி காட்ட திட்டமிட்டதாக கைது மற்றும் 1986ல் சட்டநகல் எரிப்பு போராட்டம், இந்தி திணிப்பு போராட்டம், விலைவாசி போராட்டம் என கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, அப்போராட்டங்களை முன்னெடுத்து வெற்றிபெற பாடுபட்டவர்.

"மக்கள் பணியிலேயே தன்னுயிர் ஈந்த அன்புச் சகோதரர் ஜெ.அன்பழகனின் பொதுவாழ்வு – கழகப்பணி – தியாக உணர்வுக்குத் தலைவணங்கி, கண்ணீர் பெருக்குவதன்றி, வேறு வழி எனக்குத் தெரியவில்லை" என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**